# ஹெல்த் ஃபார் ஒன் மில்லியன் (ஹோம்)

1. ஹோம் என்றால் என்ன?

ஹோம் மகளிரை முன் நிறுத்தி குடும்பத்தை மையமாகக்; கொண்ட ஒரு திட்டம். ஒரு சமூகத்தின் தாய்மார்க்ளும மகளிரும் தங்களுடையவும தங்கள் குடும்பத்தினருடையவும ஆரோக்கியத்தில் அக்கரை காட்ட ஊக்குவிக்கப்படுகின்றார்கள். ஒரு தாய் பயனடையும்போது ஒரு குடும்பமே பயனடைகிறது என்று ஹோம் நம்புகிறது. இத்திட்டத்தில் பெண்கள் பயன் பெறுபவரகளாக மட்டுமின்றி குடும்பம் மற்றும் சமூக ஆரோக்கியம் நலன்கள் ஆகியவற்றை அடையச் செய்யும் ஆக்கபூர்வமான கருவிகளாக செயல்படுகின்றனர். ஹோம் அடிப்படையில் தன்னார்வு சேவையை வலியுறுத்துகிறது. இத்திட்டத்தில் செயல்படுவோர் மாதம் 2 மணி நேரம் செலவிட தயாராக இருக்க வேண்டும. இந்த இரண்டு மணி நேரத்தை

a) வாலண்டியாரின் கீழ் நடக்கும் இரு வார கூட்டங்களில் கூட்டத்தில் பங்கு பெறவும.

b) தாய் தலைவியர் கற்றுக்கெடுத்தவற்றை தங்கள் குழுவில் உள்ள பிற குடும்பத்தாருக்கும் கற்றுக்கொடுப்பதற்குமாக செலவிடுகின்றனர;.

இத்தகைய கூட்டங்களில் பங்கு பெறுவதே ஹோம் அமைப்பில் அடிப்படையாக நிறைவேற்றப்படவேண்டிய செயலாகும். கூட்டங்களில் பங்குபெறம் தாய்மார்களின் வருகையை தாய் தலைவி பதிவு செய்து வாலண்டியரை ஒப்படைப்பார். 5 வாலண்டியார்களின் பொறுப்பை பெற்றிருக்கும் புரோமோட்டரை இத்தகவல் வந்தடைகிறது. எனவே புரோமோட்டர் சுமார் 5000 நபர்களின் ஆரோக்கியத்தைக் கவனிக்கிறார். 20 புரோமோட்டர்கள் சேரும்போது ஒரு சோண் ஆகிறது. இதற்கு ஆர்கனைசர் ஒருவர் பொறுப்பேற்கிறார். 10 ஆர்கனைசர்கள் இவ்வாறு செயல்படும்பேது 10 லட்சம மக்களின் சுகாதார பராமரிப்பு நடைபெறும;;.

## 2. சிறு வரலாறு

1973-ம் ஆண்டு 'இந்திய கத்தோலிக்க மருத்துவமனை சங்கம்' **(Catholic Hospital Association of India)** தன் மாநாட்டின் மையக் கருத்தாக 'பல லட்சம் மக்களுக்கு சுகாதாரம்' **'Health for the Millions'** என்பதை விவாதித்தது. இக்கருத்து 'இந்திய தன்னார்வசுகாதார சங்கம்' **(Voluntary Health Association of India)** வழியாக மீண்டும் விரிவாக ஆராயப்பட்டது.

இந்நிலையில் 1978-ம் ஆண்டு ‘உலக சுகாதார நிறுவனம்’ **(World Health Organization)** ஆல்மா ஆட்டா பிரகடனம் **(Alma – Ata Declaration)** வழியாக இரண்டாயிரம் ஆண்டில் எல்லா மக்களுக்கும் சுகாதாரம் **(Health for all by 2000 AD)** என்ற பெரும் இலக்கை உலக மக்களுக்கு நிர்ணயித்தது. இந்த சிந்தனை ஓட்டத்தில் மக்களின் தேவைக்கும் அழைப்பிற்க்கும் விடையாக தந்தை லாறன்ஸ் (பின்னர் ஆயர் லாறன்ஸ் மார் எஃப்ரேம்;) அவர்களின் முயற்சியால் உருவாகி வளர்ந்த ஒரு முன்னோடி திட்டமே பத்து லெட்சம் மக்களுக்கு சுகாதாரம;; **(Health for one Million)** அல்லது ஹோம் **(HOM)** ஆகும். இத்திட்டம் அமைப்பு ரீதியாக முறைப்படி ஆரம்பிக்கப்பட்டது 1976-ம் ஆண்டு ஆகும;.

1976 –ம் ஆண்டு முதல் 1980 –ம் ஆண்டு வரையிலான காலம் பயிற்சிக்காலம். இக்காலத்தில் கிராமப்புற வாலண்டியர்கள் கண்டுகொள்ளப்பட்டு ஊக்குவிக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டனர். இவர்கள் தங்கள் ஆர்வத்திலும் திறமையிலும் தொண்டு மனப்பான்மையிலும் மக்கள் ஆதரவாலும் இப்பொறுப்புகளுக்கு இயல்பாகவே பரிணமித்தவர்கள். இவர்களின் சிலர் புரோமோட்டர்களாகவும் ஆர்கனைசர்களாகவும் பயிற்ச்சி பெற்றனர். 1980 –ம் ஆண்டு திருவனந்தபுரத்தில் நடந்த ஹோம் - வாலண்டியர்களின் மாநாட்டில் 1057 கிராமப்புற வாலண்டியர்கள் பங்கு பெற்றனர்.

# ஹெல்த் ஃபார் ஒன் மில்லியன் (ஹோம்)

எஞ்சிய ஆண்டுகள் அதாவது 1981 முதல் 2000 வரை ஹோம் அமைப்பு வழியாக பல நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**3.** குறிக்கோள்கள்

ஏல்லா மக்களும் குறிப்பாக நலிவுற்ற மக்கள் பயனடையும் பொருட்டு சுகாதாரம் மற்றும் வளர்ச்சி பற்றி தொடர்ச்சியாக கல்வி புகட்டி சுயமாக செயல்படக்கூடிய ஒரு அமைப்பை பரிணமிக்கச் செய்வதே ஹேல்த் ஃபார் ஒன் மில்லியனின் குறிக்கோள்.

**4.** ஹோம்-ஐ வழிநடத்தும் கொள்கைகள்;

1. முழுமையான ஆரோக்கிய முயற்சியில் ஆரோக்கிய பராமரிப்பே நோய் குணமாக்குதலைவிட முக்கியமானது. முழுமையான மனிதவளர்ச்சி சூழ்நிலையில் மட்டுமே ஆரோக்கியத்தை பேண முடியும்.
2. வளர்ச்சி என்பது சுயமாக வளர்வது. எனவே சமூகத்தின் வளர்ச்சி என்பது சமூகம் தன்னிலே சுயமாக வளர்வது. ஆகவே சுயஉதவி மற்றும் நிரந்தர சுயவளர்ச்சி திட்டங்கள் மிக முக்கியமானவை.
3. வெளியில் இருந்து கிடைக்கும் உதவி எந்த அளவுக்கு தலமக்களை ஒன்றுகூட்டவும் அவர்களது முயற்சியை

ஒருங்கிணைக்கவும் அவர்களது தலைமைத்துவத்தை ஊக்கப்படுத்துவதற்கும் உதவுகிறதோ அந்த அளவிற்கே பயனள்ளதாகும். ஏனவே உதவியாளர்களின் பணி மக்களுக்காக பணிபுரிவதை விட மக்களுடன் பணிபுரிவதே ஆகும்.

4. சமூகத்தின் பங்கு பெறுதலை விட சமூக தீர்மானமே மிக அதிக பொருள் உள்ளதாகும்.
5. நலத்திட்டங்களை செயல்படுத்தும்போது தல வளங்களை அதாவது நபர்கள் நிதி நிறுவன வசதிகள்  சமூக அமைப்புகள் ஆகியவை ஜாதி மத வேறுபாடின்றி பயன்படுத்தப்பட வேண்டும்.
6. நலத்திட்டங்கள் செயல்படுத்தும்போது பொருத்தமான தொழில் நுட்பத்தை பயன்படுத்தவேண்டும்.

சுகாதாரம் வளர்ச்சி ஆகியவை பற்றி கல்வி புகட்டும்போது முறைசார்ந்த மற்றும் முறைசாரா வழிகளை கையாள வேண்டும்.

5 ஹோம் செயல்முறை

சுமார் 20 தாய்மார்கள் இருவாரங்களக்கு ஒருமுறை ஹோம் யூனிட்-ல் ஒன்று கூடுகிறார்கள்;

இவர்கள் தாய்-தலைவியர் என அழைக்கப்படுகின்;றனர். ஓவ்வொரு தாய்-தலைவியும் தங்களை சுற்றியுள்ள 9 குடும்பத்துடன் தாங்கள்

கற்றிருந்ததை பகிர்ந்து கொள்கின்றனர். அச்சிடப்பட்ட ஹோம் - குறிப்புகளை இவர்கள் பயன்படுத்தி பிறரை படிப்பிக்கின்றனர்.

பிறருடன் கூடிய கருத்துப் பரிமாற்றத்தின போது அந்த குடும்பங்களிலிருந்து தகவல்கள் சேகரிக்கின்றனர்.

இவ்வாறு கிடைத்த தகவல்களை யூனிட் கூட்டத்தின் போது ஹோம் - வாலாண்டியரிடம் அறிவிக்கின்றார்கள்.

ஹோம் - வாலாண்டியர் இவற்றை ஹோம் புள்ளட்டினில் பதிவு செய்கிறார்கள். ஹோம்-புள்ளட்டின் தான் ; ஹோம் செயல்பாடுகளின் கண்காணிப்பு கருவியாக பயன்படுகிறது.

இந்த புல்லட்டின் சென்டர் கூட்டத்திற்கு எடுத்து செல்லப்பட்டு ஹோம்-புரோமெட்ரிடம் கொடுக்கப்படுகின்றது.

ஆவர் இதை மாதந்தோறும் நடைபெறும் சோனல் கூட்டத்தில் கொண்டு வந்து ஹோம் ஆர்கனைசரிடம் கொடுக்க அவர் இதை ஒருங்கிணைப்பாளரிடம் ஹோம் அலுவலகத்தில் ஒப்படைப்பார்.

ஒருங்கிணைப்பாளர் ஹோம்-திட்டக்குழவுடனும் வல்லுநருடனும் இணைந்து கிடைத்த தகவல்களை கற்று ஆய்வு செய்து ஒரு அறிக்கையை தயார் செய்வார்.

# ஹெல்த் ஃபார் ஒன் மில்லியன் (ஹோம்)

இந்த அறிக்கையின் அடிப்படையில் அடுத்த மாத புள்ளட்டின் குறிப்புகள் தயாரிக்கப்படும்.

இந்த ஹோம் - புள்ளட்டின் மற்றும் குறிப்புகள் அடுத்த ஹோம் ஆர்கனைசரின் கூட்டத்தில் அதிக எண்ணிக்கையில் வழங்கப்பட்டு அலுவலக கூட்டத்தில் ஆர்கனைசர்களுக்கு விளக்கப்படுகிறது.

ஆர்கனைசர்கள் அவற்றை புரேமெட்டர்களுக்கு அடுத்த சோனல் கூட்டத்தில் பகிர்ந்து வழங்குவார்கள்.

புரேமெட்டர்கள் அவற்றை சென்டர் கூட்டத்தில் வாலண்டியர்களுக்கு பகிர்ந்தளிப்பார்கள்.

வாலண்டியர்கள் அதன் கருத்துக்களை தாய் தலைவியர்களுடன் ஹோம்-யூனிட் கூட்டத்தில் பரிமாறி கொள்வார்கள்.

தேவைக்கு ஏற்ப சுகாதாரம் பற்றியும் வளர்ச்சி பற்றியும் சரியான தகவல்கள் அடங்கிய முக்கியமான தலைப்புகளில் ஹோம் குறிப்புக்கள் வல்லுநர்களால் தயாரிக்கப்படுகிறது.

அச்சிடப்பட்ட குறிப்புகள் விலை இன்றி வழங்கப்படுகின்றது.

இவை ஆர்கனைசர்கள்  புரோமோட்டர்கள  வாலண்டியர்கள்  தாய்; தலைவியர்; என்ற முறைபடி கூடவேண்டிய கூட்டங்களை போய்

சேரும் தாய்.தலைவியர்; அடிமட்ட குடும்பங்களிடம் இத்தகவல்களை எடுத்துச்சென்று அவற்றை செயல்படுத்துவதை உறுதிப்படுத்துகின்றனர்;

துகவல் பரிமாற்றங்கள் மிகவும் முறைசாரா வழிகளில் நடைபெறுகிறது.

**6.** ஹோம் விதி

'பிறர் உங்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ அதையே பிறருக்கும் செய்யுங்கள்' என்ற பொன் விதியே ஹோம் செயல்பாடுகளில் கடைபிடிக்கப்படுகிறது ஹோம் மக்களிடையே சுமூகமான அன்புறவை வளர்த்து பகிர்வு மனநிலையை குடும்பங்களில் வளரச்செய்கிறது.

**7.** செயல்களும் நலத்திட்டங்களும்

யூனிசெஃப் **(UNICEF)**–D தாய்-சேய் நலத்திட்டத்தில் ஊக்குவிக்கப்பட்ட ஏழு காரியங்களுடன் ஹோம் மூன்றை கூட சேர்த்து 10 அம்ச திட்டமாக செயல்படுத்துகிறது. அவை **(GOBIFFFRED)** 1) பு - 5 வயதிற்குட்பட்ட பிள்ளைகளின் எடை எடுத்து காண்பித்தல்

2) ழு - தண்ணீர் சிகிட்சை

3) டீ - தாய்ப்பால் ஊட்டுதல்

4) ஐ - தடுப்பூசி இடுதல்

5) கு - மகளிர் கல்வி

6) கு - சத்துணவு

7) கு - குடும்பக்கட்டுபாடு (இயற்கை முறை)

8) சு - ஊனமுற்றோர் மறுவாழ்வு

9) நு - சுற்றுப்புறச்சூழல் பராமரிப்பு

10) னு- வருமான பெருக்க திட்டங்கள் வழியாக பொருளாதார வசதியைப் பெருக்குதல். ஏன அறியப்படும் பின்வருவன

இவ்வாறு ஹோம்

1. குழந்தைகள் (5 வயதிற்குட்பட்டவர்கள்) **(Children under five)**

2. பாலூட்டும் தாய்மார்கள் **(Lactating Mothers)**

3. கர்பிணித் தாய்மார்கள; **(Pregnant Women)**

4. தாய்மை நிலையை அடையும் வயதிற்குட்பட்ட மகளிர் **(women of Child Bearing Age-WCBA)**

5. உடல் மனப்பக்குவமடையும்காலத்து மகளிர் **(Teen Age Girls)**

# ஹெல்த் ஃபார் ஒன் மில்லியன் (ஹோம்)

ஆகியோரின் நலனில் அதிக அக்கரைகாட்டி வருகிறது. மேலும் ஹோம் பல நலத்திட்டங்களையும் நிவாரண பணிகளையும் பல்வேறு அமைப்புகளின் உதவியுடன் தேவைக்கேற்ப செயல்படுத்தி வருகிறது.

தந்தை லாறன்ஸ் (பின்னர் ஆயர் லாறன்ஸ் மார் எஃப்ரேம்;) அவர்களின் முயற்;சியால் உருவாகி வளர்ந்த ஒரு முன்னோடி திட்டமே பத்து லெட்சம் மக்களுக்கு சுகாதாரம்; (**Health for one Million**) அல்லது ஹோம் (HOM) ஆகும். இத்திட்டம் அமைப்பு ரீதியாக முறைப்படி ஆரம்பிக்கப்பட்டது 1976-ம் ஆண்டு ஆகும்.